[1995 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. க. அர்ச்சுனன் அவர்களுடைய கேள்விக்கு மறுபரிசீலனை செய்யப்படும். இருந்தாலும், 50 பேருக்கு எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்ச் இல்லாமலேயே வேலை அளிக்கப்பட்டிருக்கின்றது. பதிவு இல்லாமலேயே சத்துணவிலே வேலை அளிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 297, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

297—

சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

*22418—**திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி ஒன்றியம், கயத்தூர் மற்றும் வெட்டிக்காடு ஆகிய கிராமங்களை இணைக்கும் வகையில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விக்கிரவாண்டி ஒன்றியம், கயத்தூர் மற்றும் வெட்டிக்காடு ஆகிய கிராமங்களை இணைக்கும் வகையில் பாலம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசு வேலையை திட்டப்பணி மூலம் செயல்படுத்துவதற்கு பரிசிலிக்கப்பட்டு வருகிறது.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொல்கின்ற பைபிளினுடைய வாசகத்திற்கு ஏற்ப, பொற்கால ஆட்சி நடத்திவரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் கேட்கும்பொழுது எல்லாம் பரிசீலிக்கப்படும் என்று நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்

1995 ஏப்ரல் 10]

அறிவித்துள்ளார்கள். ஆகவே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை அவர்களுடைய பொற்பாதங்களுக்கு சமர்ப்பித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்த வேலைகள் எப்போது தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், கயத்தூர் மற்றும் வெட்டிக்காடு கிராமங்களை இணைக்கிற வகையில் வராக நதியின் குறுக்கே தரைப்பாலம் ஒன்று அமைப்பதற்காக சுமார் 20 லட்சம் ரூபாய் வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கேட்காமலேயே, தட்டாமலேயே இந்தப் பணிகள் எல்லாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இன்றைக்கு 27 லட்சம் ரூபாய் செலவுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பணியினை மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள் ஏதாவது ஒன்றின் மூலம் செயல்படுத்துவதற்கு அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. வீ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த திட்டப் பணிகள் எல்லாம் நடப்பாண்டிலே எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்த கோரிக்கை இன்றைக்கு இருக்கின்ற அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதிநிலைப்படி இன்றைய மதிப்பீடு சுமார் 20 இலட்சம் ரூபாய்க்கு மேலாக இருக்கிற காரணத்தினாலே இங்கே மாவட்ட திட்ட முகமை மூலமாக அந்தப் பணிகளைத் துவக்கலாம் என்ற கருத்துருவை பரிசீலித்து வருகிறது. அந்த அடிப்படையில் இன்றைய காலகட்டத்தில் அதற்கு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எவ்வளவு செலவாகும் என்பதையும் மீண்டும் ஆய்வு செய்ய இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்ட முகமை அல்லாமல் இன்றைக்கு பொதுப்பணித்துறையின் மூலமாக ரூரல் ரோட்ஸ் செக்ஷனுக்கும் இந்தப் பணி பற்றிய கருத்துரு ஆய்வுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இதையெல்லாம் பெற்ற பிறகுதான் இதிலே முழுமையாக எவ்வளவு மதிப்பீடு என்பதை நிர்ணயம் செய்து பணி துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 298, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை.*

வினா எண் 299, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

299—

சித்தன்னவாசலை சுற்றுலா மையமாக்குதல்

30166*—திரு. சி. குழந்தைவேலு:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, சித்தன்னவாசலைச் சுற்றுலா மையமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சித்தன்னவாசல் மாவட்ட உலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மாவட்ட உலாத்தலத் திட்டத்தின் கீழ் சித்தன்னவாசலில் ரூ. 8 இலட்சம் செலவில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. சி. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய வரலாறு, மதுரையில் பாண்டிய மன்னனை நீதி கேட்டு வெற்றி கண்டவர் கண்ணகி. இன்றைய வரலாறாம் தமிழகத்தின் நீதிதேவதை, என்றைக்கும் தமிழகத்தின் நிரந்தர முதல்வர், நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அமைச்சர் அவர்கள்